அத்தியாயம்

# 11

# தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

'உழைப்பின் இயல்பு சரியாக உணரப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டால், உணவு உடல் வளர உதவுவதைப்போல, உழைப்பு உயர்வான திறமையை வளர்த்திட உதவும்.

– ஜே.சி.குமரப்பா.

## கற்றல் நோக்கங்கள்

5TS4EH

1 தமிழ்நாட்டின் பொருளாதார வளங்களின் நிலையைப் புரிந்து கொள்ளுதல்.

2 தமிழ்நாட்டின் பொருளாதார செயல்திறனை பிற மாநிலங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்தல்.


## 11.1 அறிமுகம்

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் சமூக மற்றும் பொருளாதார நிலைகள் ஒரே மாதிரியானவையல்ல, மண்டலங்களிடையே பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்கள் ஏனைய பகுதிகளை விட சிறப்பாக உள்ளன. பூகோள ரீதியாக தமிழ்நாடு 11வது பெரிய மாநிலமாகும். மக்கள் தொகை அடிப்படையில் 3வது பெரிய மாநிலமாகும். தமிழ்நாடு பல்வேறு சாதனைகளுடன் சிறந்த பெரிய பொருளாதாரமாக உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பில் இரண்டாவது இடத்திலும், தலா வருமான முதலீடு, நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் தொழிற் துறை உற்பத்தி ஆகியவற்றில் 3வது இடத்திலும் உள்ளது. தொழில் செய்ய உகந்த மாநிலங்களின் வரிசையிலும் உள்ளது.

சமூகம் மற்றும் நலத்துறைகளில் ஏனைய மாநிலங்களை விட சிறப்பான நிலையில் உள்ளது. உடல் நலம், உயர் கல்வி, பச்சிளங் குழந்தை இறப்பு விகிதம் (IMR), மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) ஆகியவற்றில் தமிழ்நாட்டின் செயல்பாடு தேசிய சராசரியைவிட சிறப்பாக உள்ளது.



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 268 20-02-2020 13:28:39




அளவையில் இல்லை



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 269 20-02-2020 13:28:39

## 11.2 தமிழ்நாட்டின் சிறப்பு

- 2005 ஆம் ஆண்டிலிருந்து இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டின் வளர்ச்சியானது விரைவாக உள்ளது.
- தமிழ்நாடு வறுமை ஒழிப்பு செயல்பாடுகளில் மற்ற மாநிலங்களைவிட சிறப்பாக உள்ளது.
- இந்திய அளவில் ஏழைகளின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் ஏழை மக்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களைவிட மிகக் குறைவாக உள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- மனித வளர்ச்சி குறியீட்டில் மூன்றாவது இடம் வகிக்கிறது.
- மூலதன முதலீட்டிலும் (₹ 2.92 இலட்சம் கோடி) மொத்த தொழில் துறை உற்பத்தியிலும் (6.19 இலட்சம் கோடி) மூன்றாவது இடம் வகிக்கிறது.
- தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் 17% பங்களிப்புடன் (37000 அலகுகள்) முதலிடம் வகிக்கிறது. மேலும் தொழில் துறையில் உள்ள வேலை வாய்ப்பில்16% பங்களிப்பு உள்ளது.
- நிதி ஆயோக் அறிக்கையின் படி சுகாதாரக் குறியீட்டில் மூன்றாவது இடம் வகிக்கிறது.
- உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் அதிகம் உள்ள மாநிலமாக உள்ளது.
- இந்தியாவில் மிக அதிக எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் உள்ளன.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் ஒரு முக்கிய மையமாக உருவெடுத்துள்ளது.
- வணிக வங்கிகளிலும் கூட்டுறவு வங்கிகளிலும் உள்ள கடன் வைப்பு விகிதம் மிகச் சிறப்பாக உள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) முதலீட்டுத் திட்டங்களில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

## 11.3 தமிழகத்தின் செயல்பாடு

மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்கள் சில பொருளாதாரக் குறியீடுகளில் சிறந்து விளங்குகின்றன. கேரளா கல்வியறிவு, குழந்தை இறப்பு விகிதம், மகப்பேறு இறப்பு விகிதம் ஆகியவற்றில் முன்னணியில் உள்ளது. ஆனால் தமிழ்நாடானது சுகாதாரம், உயர்கல்வி, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, வேலையின்மை ஒழிப்பு போன்றவற்றில் மிகச் சிறப்பாகவும் பிற மாநிலங்களைவிட மேலானதாகவும் உள்ளது.

**மூன்றாம் இடத்தில் தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடு**

தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடானது கேரளம் பஞ்சாப் மாநிலங்களின் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் பச்சிளங் குழந்தை இறப்பு வீதம் 14 ஆகும். இது பிற மாநிலங்களைக் காட்டிலும் மிகக் குறைவு. மேலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு வீதம் 2014-ல் 21 ஆகவும், 2015-ல் 20 ஆகவும் குறைந்துள்ளது.

**(ஆதாரம்: சுகாதார மாநிலம் – முற்போக்கு இந்திய அறிக்கை– 2018 –நிதி ஆயோக்)**



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 270 20-02-2020 13:28:39

பெரும்பான்மையான மக்களுக்கான சமூக நலக் கொள்கைகளைக் கொண்டிருப்பதே தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமாகும். எடுத்துக்காட்டாக பெரும்பான்மை மக்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ள பொது விநியோகத்திட்டம், மதிய உணவுத் திட்டம், பொது சுகாதாரக் கட்டமைப்பு போன்றவற்றின் மூலம் நலத்தை மேம்படுத்துவதை இங்கு குறிப்பிடலாம்.

## 11.4 இயற்கை வளம்

### 11.4.1 நீர்வளம்



பிற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாட்டின் இயற்கை வளம் குறைவாகும். இந்திய மாநிலங்களுக்கிடையில் மக்கள் தொகையில் 6சதவீதமாக இருந்த போதிலும், நீர் வளத்தில் 3சதவீதமும், நில பரப்பளவில் 4சதவீதமும் உள்ளது.

தென்மேற்கு பருவக் காற்றைத் தொடர்ந்து வரும், வட கிழக்குப் பருவக்காற்று மழைப் பொழிவுக்கான மிகப்பெரிய ஆதாரமாகும். தமிழ்நாட்டில் 17 ஆறுகள் உள்ளன. பாலாறு, செய்யாறு, பெண்ணையாறு, காவேரி, பவானி, வைகை, சித்தாறு, தாமிரபரணி, வெள்ளாறு, சிறுவாணி, நொய்யல், வைப்பார், குண்டாறு போன்றவை முக்கிய ஆறுகள் ஆகும். தமிழகத்தில் கிணற்று பாசனம் அதிக அளவில் உள்ளது. (56%).

**அட்டவணை 11.1 பாசனத்திற்கான ஆதாரங்கள்**

| பாசன விவரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அணைக்கட்டுகள் | 81 |
| கால்வாய்கள் | 2239 |
| குளங்கள் | 41262 |
| குழாய் கிணறுகள் | 3,20,707 |
| திறந்தவெளி கிணறுகள் | 14,92,359 |

Source: Tamil Nadu Government Season & Crop Report 2012-13

### 11.4.2 கனிம வளங்கள்

டைட்டானியம், லிக்னைட், மேக்னசைட், கிராபைட், லைம்ஸ்டோன், கிரானைட், பாக்சைட் போன்ற சுரங்கத் திட்டங்கள் தமிழகத்தில் உள்ளன. இவற்றில் முன்னோடித் திட்டமாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தை குறிப்பிடலாம் (NLC). இதன் வளர்ச்சியினால் அனல் மின்நிலையம், உரத் தொழிற்சாலை, கார்பன் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருகின்றன. இதே போல் சேலத்தில் மாங்கனிசு சுரங்கமும்,





11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 271 20-02-2020 13:28:40

ஏற்காட்டில் பாக்சைட் சுரங்கமும், கஞ்சமலையில் இரும்புத்தாது சுரங்கமும் அமைந்துள்ளன மாலிப்டினம் எனும் இரசாயனத்தாது இந்தியாவிலேயே மதுரை மாவட்டத்தில் உள்ள கரடிக்குட்டம் என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது.

**அட்டவணை 11.2 கனிம வளங்கள்**

| கனிமம் | இருப்பு (டன்களில் | நாட்டின் இருப்பில் தமிழகத்தின் பங்கு |
|---|---|---|
| லிக்னைட் | 30,275,000 | 87% |
| வேர்மிகுலைட் | 2,000,000 | 66% |
| கார்னெட் | 23,000,000 | 42% |
| ஜேர்கான் | 8,000,000 | 38% |
| கிராபைட் | 2,000,000 | 33% |
| லெமனைட் | 98,000,000 | 28% |
| ரூட்டைல் | 5,000,000 | 27% |
| மோனசைட் | 2,000,000 | 25% |
| மேக்னசைட் | 73,000,000 | 17% |

(ஆதாரம்: நிலவியல் மற்றும் சுரங்கத்துறை)

## 11.5 மக்கள் தொகை

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவிலுள்ள 121 கோடி மக்கள் தொகையில் 7.21 கோடி மக்கள் தொகையுடன் தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது. ஐக்கிய நாடுகள் அறிக்கையின் படி தனித்த தேசிய இனமாக இயங்க கூடிய நாடுகளின் மக்கள் தொகையை விட தமிழ்நாட்டின் மக்கள் தொகை கூடுதலாக உள்ளது.

**அட்டவணை 11.3 மக்கள் தொகை**

| மாநிலம் / நாடு | மக்கள் தொகை (கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு | 7.2 |
| இங்கிலாந்து | 6.5 |
| பிரான்ஸ் | 6.5 |
| இத்தாலி | 5.9 |
| தென் ஆப்பிரிக்கா | 5.6 |
| ஸ்பெயின் | 4.7 |
| இலங்கை | 2.1 |

(ஆதாரம்: 2017-ல் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு வெளியிட்ட உலக மக்கள் தொகை பட்டியல்)

### 11.5.1 மக்கள் அடர்த்தி

மக்கள் தொகை அடர்த்தியானது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 2001ல் 480 ஆகவும், 2011ல் 555 ஆகவும் உள்ளது. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12ஆவது இடத்தில் உள்ளது. மக்கள் தொகை அடர்த்தியில் தேசிய சராசரி 382 ஆகும்.

### 11.5.2 நகரமயமாதல்

இந்திய அளவில் நகரமயமாதலின் சராசரி அளவு 31.5% ஆக உள்ளது. ஆனால் தமிழகத்தில் 48.4% ஆக உள்ளது. இந்திய



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 272 20-02-2020 13:28:40

அளவில் மொத்த மக்கள் தொகையில் 6சவீதத்தைக் கொண்டுள்ளது தமிழகம். நகரமக்கள் மொத்த மக்கள் தொகையில் தமிழகம் 9.61 சதவீதத்தைக் கொண்டு உள்ளது.

## 11.5.3 பாலின விகிதம் (1000 ஆண்களுக்கான பெண்களின் எண்ணிக்கை)

சமச்சீர் பாலினவிகிதம் என்பது பெண்கள் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதைக் குறிக்கிறது. தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும். பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போதும் இந்திய அளவிலும் இந்த விகிதம் மிக அதிகமாகும். பாலின விகிதத்தில் கேரளம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அடுத்தப்படியாக தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

**அட்டவணை 11.4 சுகாதாரம் மற்றும் சமூகக் குறியீடுகள்**

| வ. எண் | குறியீடு | தமிழ்நாடு | இந்தியா |
|---|---|---|---|
| 1 | IMR | 17 | 34 |
| 2 | MMR | 79 | 159 |
| 3 | வாழ்நாள் எதிர்பார்ப்பு (மொத்தம்)<br>ஆண்கள்<br>பெண்கள் | 70.6<br>68.6<br>72.7 | 67.9<br>66.4<br>69.6 |
| 4 | கல்வியறிவு வீதம் (மொத்தம்)<br>ஆண்கள்<br>பெண்கள் | 80.33 %<br>86.81 %<br>73.86 % | 74.04%<br>82.14%<br>65.46% |
| 5 | பாலின விகிதம் | 995 | 940 |

## 11.5.4 குழந்தை இறப்பு விகிதம் (1வயதுக்குள்)

தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் மற்ற மாநிலங்களை விட குறைவாகவுள்ளது. நிதி ஆயோக் அறிக்கையின் படி 2016ம் ஆண்டில் தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விதிதம் 17 ஆகும். இது தேசிய சராசரி 34ல் பாதி அளவாகும்.

## 11.5.5 மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) (1 லட்சம் மகப்பேறில்)

நிதி ஆயோக் அறிக்கையின் படி மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு 79 எண்ணிக்கையுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. இது தேசிய சராசரியான 159ல் சரிபாதி அளவாகும். மகப்பேறு இறப்பு விகிதத்தில் கேரளம் 61 (முதலிடம்), மகாராஷ்டிரா 67ஆகவும் இரண்டாம் இடத்தில் உள்ளது.

## 11.5.6 வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம்

சராசரியாக ஒரு நபரின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே ஆயுட்காலம் என்று அழைக்கப்படுகிறது. வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும் போது இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவு. இந்தியாவின் சராசரி ஆயுட்காலம் 67.9 ஆண்டுகள் (ஆண் – 66.4 ஆண்டுகள் பெண் – 69.6 ஆண்டுகள்) ஆகும். ஆனால் தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகளாக (ஆண் – 68.6 ஆண்டுகள், பெண் – 72.7 ஆண்டுகள்) உள்ளது.



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 273 20-02-2020 13:28:40

### 11.5.7 எழுத்தறிவு நிலை

தமிழ்நாட்டின் எழுத்தறிவு நிலை மற்ற இந்திய மாநிலங்களோடு ஒப்பிடும் போது முன்னேறிய நிலையில் உள்ளது.

## 11.6 மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP)

மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் போன்றதே மாநில உள்நாட்டு உற்பத்தியாகும். மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு மாநிலத்தின், ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பாகும்.

தமிழ்நாடு பொருளாதார மற்றும் புள்ளியியல் இயக்கத்தின் ஆய்வின் படி, நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDSP) 2016–17 நிதியாண்டில் 207.8 பில்லியன் டாலராக உள்ளது. நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உலக அளவில் குவைத் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகவும், வாங்கும் சக்தியின் அடிப்படையில் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளின் (UAE) மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமாகவும் உள்ளது.

பிற நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒப்பிடும் போது தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகமாக உள்ளது.


**அட்டவணை 11.5 உலக நாடுகளுடன் தமிழ்நாட்டு GSDP – ஓர் ஒப்பீடு**

| மாநிலம் / தேசம் | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|
| தமிழ்நாடு (GSDP) | $ 207.8 |
| ஈராக் (GDP) | $ 171 |
| நியுசிலாந்து (GDP) | $ 184 |
| இலங்கை (GDP) | $ 81 |

(ஆதாரம்: IMF அவுட்லுக் ஏப்ரல் 2017)

### 11.6.1 துறை வாரியாகப் பங்களிப்பு

தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சேவைத் துறையானது 63.70% பங்களிப்புடன் முதலிடத்திலும், தொழில் துறை 28.5% பங்களிப்புடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது. வேலை வாய்ப்பைப் பொருத்த மட்டில் வேளாண்மை முக்கியப் பங்கு வகித்தாலும் அதனுடைய மாநில உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பானது 7.76% ஆக குறைந்துள்ளது. சேவைத்துறை மற்றும் தொழில்துறை வேகமாக வளர்கின்றன. இந்திய அளவிலும், தமிழ்நாட்டளவிலும், வேளாண்மை பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்பும் உணவும் வழங்குகிறது. ஆனால் குறைந்த






11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 274 20-02-2020 13:28:40

வேகத்திலேயே அதன் வளர்ச்சி உள்ளது. இந்த நிலையினால், நீடித்த நிலையான வளர்ச்சிக்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.

### 11.6.2 தனிநபர் வருமானம்

தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் 2200 டாலர்களுடன், இந்தியாவில் உள்ள பல மாநிலங்களைக் காட்டிலும், உயர்வாக உள்ளது. தமிழ்நாட்டின் தலாவருமானம், 2018ல் உள்ள புள்ளிவிபரங்களின்படி இந்திய சராசரி அளவை விட 1.75 மடங்கு அதிகமாக உள்ளது. அதே போல் பல நாடுகளுடன் ஒப்பிடும் போது அந்நாடுகளை விட அதிகமாகவும் உளளது. ரூபாயின் அடிப்படையில் 2010–11 ல் தமிழ்நாட்டின் தலாவருமானம் ₹1,03,600 ஆக இருந்தது, 2017–18ல் ₹1,88,492 ஆக உயர்ந்துள்ளது (வரவு செலவு அறிக்கையின்படி)

**அட்டவணை 11.6 – தமிழக தலாவருமானம் பிற நாடுகளுடன் ஒப்பீடு**

| மாநிலம் / தேசம் | தனிநபர் வருமானம் (டாலர்களில்) |
|---|---|
| தமிழ்நாடு | 2200 |
| இந்தியா | 1670 |
| நைஜீரியா | 2175 |
| நிகரகுவா | 2151 |
| பாகிஸ்தான் | 1443 |
| வங்காளதேசம் | 1358 |
| ஜிம்பாப்வே | 1029 |
| நேபாளம் | 729 |

**(ஆதாரம்: உலக வங்கியின் தேசிய கணக்குகள் OECD தேசிய கணக்குகள்)**

தமிழ்நாட்டின் தலா வருமானம் மற்ற தென்மாநிலங்களுடன் கீழ் உள்ளவாறு ஒப்பீடு செய்யப்படுகிறது.

**அட்டவணை 11.7 தலா வருமானம் (ரூபாயில்) (2015–16) பிற மாநிலங்களுடன் ஒப்பீடு**

| மாநிலம் | தனிநபர் வருமானம் (ரூபாயில்) |
|---|---|
| தமிழ்நாடு | 1,57,116 |
| கேரளா | 1,55,516 |
| கர்நாடகா | 1,46,416 |
| தெலுங்கானா | 1,58,360 |
| ஆந்திரபிரதேசம் | 1,37,000 |

(ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி நியூடெல்லி 17 பிப்ரவரி 2017)

## 11.7 வேளாண்மை

வரலாற்று ரீதியாக தமிழகம் ஒரு வேளாண் மாநிலமாகும். தற்போது தமிழகத்தில் ஏழு வேளாண் காலநிலை மண்டலங்கள் (AGRO CLIMATIC ZONES) உள்ளது. இங்கு பல்வேறு வகையான மண் வளம் இருப்பதால் பழங்கள், காய்கறிகள், மசாலா பொருட்கள், தோட்டப் பயிர், மலர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் போன்றவை பயிரிட ஏதுவாக உள்ளளது. தமிழகம் தேசிய உதிரி பூக்கள் உற்பத்தியில் முதலிடத்திலும் பழங்கள் உற்பத்தியில் மூன்றாமிடத்திலும் உள்ளது. தமிழகத்தில் வேளாண்மையானது மிக அதிக அளவில் ஆற்றுநீர் மற்றும் பருவமழையை நம்பியுள்ளது. தற்போது இந்தியாவின் நெல் உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக மேற்கு வங்கத்திற்கு அடுத்ததாக உள்ளது. மிகப்பெரிய அளவில் மஞ்சள் உற்பத்தி செய்யும் மாநிலமாகவும் உள்ளது. கம்பு, சோளம், நிலக்கடலை, எண்ணெய் வித்துகள், கரும்பு போன்றவை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது. தோட்டப் பயிர் வாழை, தேங்காய் உற்பத்தியில் முதலிடத்திலும், இரப்பர்




11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 275 20-02-2020 13:28:40

உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், மிளகு உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், கரும்பு உற்பத்தியில் நான்காவது இடத்திலும் உள்ளது.

அனைத்து வகைப் பயிர்களுக்கான மொத்த உற்பத்திப் பரப்பு 2013-14ல் 58.97 இலட்சம் ஹெக்டேர்களாக உள்ளது. உணவு தானிய உற்பத்திப் பரப்பு 72.9% ஆகவும் பிற பயிர்களுக்கான உற்பத்திப் பரப்பு 27.1% ஆகவும் உள்ளது. உணவுப் பயிர்களில் நெல் முக்கியப் பங்கு வகிக்கிறது. பிற பயிர்களில் கடலை மற்றும் தேங்காய் முக்கியப்பங்கு வகிக்கிறது.

**உற்பத்தி தொகுதி**




## 11.7.1 உணவு தானிய உற்பத்தி



உணவு தானிய உற்பத்தியில் நெல் உற்பத்தி 79.49 இலட்சம் டன் (2014-15) உற்பத்தியோடு முதலிடம் பெற்றுள்ளது. சிறு தானியங்கள் 40.79 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பருப்பு உற்பத்தி 2011-12ல் 3.59 இலட்சம் டன்னிலிருந்து 2014-15ல் 7.67 இலட்சம் டன்னாக குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. 2015-16ல் பருவ மழை பொய்த்ததால் உற்பத்தி சிறிதளவு குறைந்தது.

## 11.7.2 இந்திய அளவில் உற்பத்தித்திறனில் தமிழகத்தின் நிலை

தமிழக அரசு வேளாண் விளை பொருள் உற்பத்திக்கும், உற்பத்தித் திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 276 20-02-2020 13:28:41

இதன் காரணமாக தமிழகம் உணவு தானியங்கள் மற்றும் பிற தானியங்களின் உற்பத்தித் திறனில் முதன்மை மாநிலமாக உள்ளது. மக்காச் சோளம், கம்பு, நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவற்றின் உற்பத்தியில் முதலிடத்திலும் நெய், தேங்காய் ஆகியவற்றில் இரண்டாவது இடத்திலும், கரும்பு, சூரியகாந்தி, சோளம் ஆகியவற்றில் மூன்றாவது இடத்திலும் மிளிர்கிறது.

**அட்டவணை 11.8 – தேசிய அளவில் தமிழ்நாட்டின் உற்பத்தித்திறன் நிலை**

| தானிய வகை | தேசிய அளவில் தமிழக நிலை |
|---|---|
| மக்காச் சோளம் | 1 |
| கம்பு | 1 |
| கடலை | 1 |
| எண்ணெய் வித்துக்கள் | 1 |
| பருத்தி | 1 |
| தேங்காய் | 2 |
| நெல் | 2 |
| கரும்பு (மெட்ரிக் டன்) | 3 |
| சூரியகாந்தி | 3 |
| சோளம் | 3 |
| திடமான தானியங்கள் | 4 |
| மொத்த தானியங்கள் | 8 |

**(ஆதாரம்: தமிழக அரசின் வேளாண்மைத் துறை கொள்கை விளக்க குறிப்பு 2017–18)**

## 11.8 தொழில்துறை

சென்னை, இந்தியாவின் மருத்துவத் தலைநகரம் எனவும், வங்கித் தலைநகரம் எனவும் அழைக்கப்படுகிறது. இது உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்துள்ளது. இது ஆசியாவின் டெட்ராய்ட் (Detroit of Asia) எனவும் அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 110 தொழிற் பூங்காக்கள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளோடு செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழக அரசு இரப்பர் பூங்கா, ஆயத்த ஆடைகள் பூங்கா, பூக்கள் பூங்கா, உயிரி தொழில்நுட்பப் பூங்கா, சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் வேளாண் ஏற்றுமதிப் பூங்கா போன்ற பல துறைகளையும் முன்னேற்றியுள்ளது.

மாநிலத்தின் பெரிய அளவிலான பொறியியல் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மையமிட்டுள்ளன. சென்னை பன்னாட்டு அளவில் கார் உற்பத்தி ஜாம்பவான்களின் நகரமாக உள்ளது.


பேருந்து கட்டுமானத் தொழிலுக்குப் பெயர் பெற்ற கரூர், தென்னிந்திய பேருந்து கட்டுமானத் தொழிலுக்கான பங்களிப்பில் 80% மாக உள்ளது. கரூரில் உள்ள தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனம் ஆசியாவிலேயே மிகப் பெரிய சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத காகித நிறுவனங்களுள் ஒன்றாக செயல்பட்டு வருகிறது. 'எஃகு நகரம்' என்றழைக்கப்படும் சேலத்தில் பல



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 277 20-02-2020 13:28:41

பெரிய ஜவ்வரிசி தயாரிப்பு நிறுவனங்களும் கனிமச் செல்வங்களும் உள்ளன. சிவகாசி அச்சுத் தொழில், பட்டாசு நிறுவனங்களுடன் தீப்பெட்டித் தயாரிப்பில் முன்னோடியாக உள்ளது. இந்தியாவின் மொத்தத் தீப்பெட்டி உற்பத்தியில் 90% பங்கு சிவகாசியில் உற்பத்தியாகிறது. 'தமிழகத்தின் நுழைவாயில்' தூத்துக்குடி ஆகும். சென்னைக்கு அடுத்தபடியாக வேதிப்பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**தமிழ்நாட்டின் தொழில் கொத்து**




## 11.8.1 ஜவுளித்துறை



தமிழ்நாடு இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும். தமிழ்நாடு இந்தியாவின் 'நூல் கிண்ணம்' என அழைக்கப்படுகிறது. இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் 41 சதவீத நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தியாவின் பொருளாதாரத்தில் ஜவுளித்துறை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. 35 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% பங்களிப்பையும், மொத்த ஏற்றுமதி வருவாயில் 35% ஜவுளித் துறையிலிருந்து கிடைக்கிறது. உற்பத்தித்துறையில் 14% பங்களிப்பு ஜவுளித்துறை மூலமாக கிடைக்கப் பெறுகிறது. நூல் நூற்பிலிருந்து ஆடைத் தயாரிப்பு, ஜவுளிகளுக்கான உற்பத்தித் தொடர்புடைய அனைத்து வசதிகளும் தமிழ்நாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகளான கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் கரூர் போன்ற

மாவட்டங்களில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா நூற்பாலைகளில் பயன்படுத்தப்படும் பருத்தி பாலியஸ்டர் கலப்பு நூல் (Blended Yarn), பட்டு நூல் உற்பத்தி செய்யும் ஆலைகள் பெருமளவில் அமைந்துள்ளன. இங்கிருந்து சீனா வங்கதேசம் போன்ற பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

'பின்னலாடைகளின் நகரம்' என அழைக்கப்படும் திருப்பூர் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பளவில் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்கிறது. திரைச் சீலைகள், படுக்கை விரிப்புகள், சமையலறை விரிப்புகள், கழிவறை விரிப்புகள், மேஜை விரிப்புகள், சுவர் அலங்காரங்கள் போன்ற உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது. ஈரோடு மாவட்டம் தென்னிந்தியாவின் மொத்த மற்றும் சில்லறை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக உள்ளது.

### 11.8.2 தோல்பொருட்கள்

இந்தியாவின் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 30% தையும்,தோல்பொருட்கள் தயாரிப்பில் 70 சதவீதத்தையும் தமிழகம் கொண்டுள்ளது. நூற்றுக்கணக்கான தோல் பொருட்கள் மற்றும் பதனிடும் தொழிற்சாலைகள் வேலூர், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பன்னாட்டு தோல் பொருட்கள் கண்காட்சி சென்னையில் நடைபெறுகிறது.

### 11.8.3 மின்னணு சாதனங்கள்

மின்னணு சாதனங்கள் உற்பத்தி தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக உள்ளது. பல பன்னாட்டு மற்றும் தெற்காசியாவின் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மையமாக சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன.

### 11.8.4 வாகன உற்பத்தி

'ஆசியாவின் டெட்ராய்ட்' என்றழைக்கப்படும் சென்னை மிகப்பெரிய அளவிலான வாகன உதிரி பாகங்கள் தயாரிப்புக்கான இடமாக விளங்குகிறது. தமிழ்நாடு, இந்திய அளவில் வாகன மற்றும் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தியில் 28 சதவீதமும், லாரிகளுக்கான உற்பத்தியில் 19 சதவீதமும், பயணியர் கார் மற்றும் இருசக்கர வாகன உற்பத்தியில் 18 சதவீதமும் கொண்டுள்ளது.

### 11.8.5 சிமெண்ட் தொழிற்சாலை

சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் 3ஆம் இடத்தில் உள்ளது (ஆந்திர பிரதேசம் -முதலிடம், ராஜஸ்தான் -இரண்டாமிடம்). 2018ல் இந்தியாவில் உள்ள 10 மிகப்பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சார்ந்த ராம்கோ சிமெண்ட் மற்றும் இந்தியா சிமெண்ட் ஆகிய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. மொத்த சிமெண்ட் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் 21 அலகுகளுடன் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், 35 அலகுடன் ஆந்திர பிரதேசம் முதலிடத்திலும் உள்ளது.

## 11.8.6 பட்டாசுப் பொருட்கள்



சிவகாசி நகரம் அச்சுத் தொழில், பட்டாசுப் பொருட்கள் மற்றும் தீப்பெட்டி உற்பத்தியில் தலைமையாகச் செயல்படுகிறது. ஜவஹர்லால் நேரு அவர்களால் 'குட்டி ஜப்பான்' என்று சிவகாசி அழைக்கப்பட்டது. இந்திய பட்டாசு உற்பத்தியில் 80% சிவகாசியில் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவின் அச்சுத் துறைத் தீர்வுகளில் 60% சிவகாசியிலிருந்தே பெறப்படுகிறது.

## 11.8.7 பிற தொழிற்சாலைகள்

உலக அளவில் மின்பொருட்கள் தயாரிப்பில் மிகப் பெரிய ஒன்றான BHEL நிறுவனம் திருச்சி மற்றும் ராணிப்பேட்டையில் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. கரூரில் அமைந்துள்ள தமிழக அரசின் தமிழ்நாடு காகிதத் தயாரிப்பு நிறுவனம் உலகின் மிகப் பெரிய காகிதத் தயாரிப்பு நிறுவனமாகும். இந்தியாவின் சிமெண்ட் உற்பத்தியில் அரியலூர், விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் தயாரிப்பு நிறுவனங்களைக் கொண்டு தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. சேலத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் செழிப்பான கனிமவளம் கொண்டுள்ளன. இந்தியாவின் மிகப் பெரிய எஃகு உருக்காலை நிறுவனமான SAIL தனது எஃகு ஆலையை சேலத்தில் நிறுவியுள்ளது.

இந்தியாவின் மோட்டார் மற்றும் பம்புகளுக்கான தேவையில் மூன்றில் இரண்டு பங்கினை வழங்குவதால் கோயம்புத்தூர் 'காற்றழுத்த விசைக் குழாய் நகரம்' (Pump city) என்றழைக்கப்படுகிறது. தங்க ஆபரணங்கள், மாவு அரைப்பான் இயந்திரம் மற்றும் வாகன உதிரிப்பாகம் ஏற்றுமதியில் முக்கியப் பங்கு வகிப்பதால் "கோயம்புத்தூர் மாவு அரைப்பான்இயந்திரத்திற்கான" புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.

தூத்துக்குடி தமிழ்நாட்டின் நுழைவு வாயில் என்று அழைக்கப்படுகிறது. மாநிலத்தில் வேதிப்பொருள் உற்பத்தியில் தூத்துக்குடி முதலிடம் வகிக்கிறது. இந்திய உப்பு உற்பத்தியில் 30 சதவீதமும், மாநிலத்தின் உப்பு உற்பத்தியில் 70 சதவீதமும் தூத்துக்குடியில் உற்பத்தியாகிறது.

## 11.8.8 குறு சிறு நடுத்தர நிறுவனங்கள்

MSMED-2006 சட்டத்தின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், கட்டமைப்பு மற்றும் தளவாடப் பொருட்கள் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டிடம் நீங்கலாக) உற்பத்தி நிறுவனம், பணிகள் நிறுவனம் என வகைப்படுத்தப்படுகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில், தமிழ்நாடு 15.07



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 280 20-02-2020 13:28:50

சதவீதத்துடன் தேசியளவில் முதலிடத்தில் உள்ளது. 6.89 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உள்ளன. இவை 8000 வகையான பொருட்களை ₹32,000 கோடி முதலீட்டில் உற்பத்தி செய்கின்றன.

இவை அனைத்து துறைகளைச் சார்ந்த பெரும்பாலான பொருட்களை உற்பத்தி செய்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பொறியியல் பொருட்கள், மின் சாதன பொருட்கள், வேதிப் பொருட்கள், இரும்பு, காகிதம்,தீப்பெட்டி,நெசவு மற்றும் ஆடைகள் போன்றவையாகும். ₹1,68,331 கோடி முதலீட்டில், பதிவு செய்யப்பட்ட 15.61 இலட்சம் தொழிலமுனைவோருடன் 99.7 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது.

**(ஆதாரம் – MSMEs திட்ட குறிப்பு 2017–18)**

## 11.9 ஆற்றல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல மின்னாற்றலை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பிற தென் மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது.

**அட்டவணை 11.9 தென் மாநிலங்களில் நிறுவப்பட்ட மின் பயன்பாட்டுத் திறன்**

| மாநிலம் | அலகுகள் | தரம் |
|---|---|---|
| தமிழ்நாடு | 26,865 MW | I |
| கர்நாடகா | 18,641 MW | II |
| ஆந்திரா | 17,289 MW | III |
| தெலுங்கானா | 12,691 MW | IV |
| கேரளா | 4,141 MW | V |
| மொத்தம் | 79,627 MW | |

(Source: Central Electricity Authority, Ministry of Power, Government of India. Retrieved Jan.2017.)

நிறுவப்பட்ட திறன் அளவில் தமிழ்நாடு பிற மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது. முப்பந்தல் காற்றாலை மையம், கிராம மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக உள்ளது. கோயம்புத்தூர், பொள்ளாச்சி, தாராபுரம் மற்றும் உடுமலைப்பேட்டை போன்ற இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள காற்றாலைகள் தவிர நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிதாக காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது இந்தியாவின் 2% மின் தேவைகளை நிறைவு செய்கிறது. இது இந்தியாவின் காற்றாலை உற்பத்தியில் பாதியளவு ஆகும். (2000 மெகாவாட்கள்).

### 11.9.1 அணுமின் ஆற்றல்

கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்.



**அட்டவணை 11.10 அணுமின் ஆற்றல்**

| அலகு | ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள திறன் அளவு |
|---|---|
| கூடங்குளம் | 1834 MW (2 x 917) |
| கல்பாக்கம் | 470 MW (2 x 235) |

(ஆதாரம்: மத்திய மின் துறை அமைச்சகம் –ஜனவரி–2017 அறிக்கை)



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 281 20-02-2020 13:28:51

## 11.9.2 அனல்மின் ஆற்றல்

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெப்ப ஆற்றலில் அதிக அளவு அத்திப்பட்டு (வட சென்னை), எண்ணூர், மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது.



பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல்மின் உற்பத்தியில், தமிழ்நாடு தேசிய உற்பத்தியில் 34% க்கும் மேலாக உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது.

பல்வேறு முறைகளில் தயாரிக்கப்படும் ஆற்றல் அளவுகள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 11.11 வெப்ப ஆற்றல்**

| ஆதாரம் | மில்லியன் அலகுகள் | சதவீதம் |
|---|---|---|
| அனல் | 13304 | 49.52 |
| புனல் | 2203 | 8.20 |
| அணு | 986 | 3.67 |
| பிற (காற்று சூரிய ஒளி) | 10372 | 38.61 |
| மொத்தம் | 26865 | 100.00 |

(ஆதாரம்: மத்திய மின் துறை அமைச்சகம் -ஜனவரி-2017 அறிக்கை)

## 11.9.3 புனல் மின்சாரம்

தமிழ்நாட்டில் 20க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளன. அவற்றுள் குந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமானவையாகும்.

## 11.9.4 சூரிய சக்தி மின்சாரம்

கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ளபடி தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

**அட்டவணை 11.12 சூரிய சக்தி மின்சாரம்**

| தர வரிசை | மாநிலம் | மொத்த திறன் 31 ஜனவரி 2017 (மெகாவாட்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 1590.97 |
| 2 | ராஜஸ்தான் | 1317.64 |
| 3 | குஜராத் | 1159.76 |
| 4 | தெலுங்கானா | 1073.41 |
| 5 | ஆந்திரா | 979.65 |

(ஆதாரம்: MNRE லிருந்து பெறப்பட்ட விபரம்)

தென்தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களைச் செயல்படுத்த உகந்த மண்டலமாகக் கருதப்படுகிறது.

## 11.9.5 காற்றாலை மின்சாரம்

இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்ட மாநிலமாக



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 282 20-02-2020 13:28:52

உள்ளது. மேலும் கடற்கரை காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி,தூத்துக்குடியின்தெற்குப்பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.

## 11.10 பணிகள் துறை

வங்கி, காப்பீடு, சக்தி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை முதன்மைத் துறையான பணிகள் துறையாகும்

### 11.10.1 வங்கி

தமிழ்நாட்டில் உள்ள மொத்த வங்கிச் சேவையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் 52 சதவீத பங்குகளுடன் (5337 கிளைகள்) பணியாற்றுகின்றன. தனியார் வணிக வங்கிகள் 30% (3060 கிளைகள்), பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் 13% (1364 கிளைகள) வட்டார கிராமிய வங்கிகள் 5% (537 கிளைகள்) மற்றும் 2 அயல்நாட்டு வங்கிக் கிளைகளும் சேவையில் உள்ளன.

தமிழ்நாட்டு வங்களின் மொத்த வைப்பு நிதியானது ஒவ்வொரு ஆண்டும் 14.32% உயர்வுடன் மார்ச் 2017ல் ₹6,65,068.59 கோடியை எட்டியுள்ளது. கடன் தொகை ஒவ்வொரு ஆண்டும் 13.5% அதிகரித்து மார்ச் -2017ல் ₹.6,95,500.31 கோடியாக எட்டியுள்ளது.

முதன்மைத் துறைகளுக்கான கடன் தெகையானது 45.5 சதவீதமும் (தேசிய சராசரி 40%) வேளாண்மைத் துறைகளுக்கான கடன் வழங்கல் அளவு மார்ச் 2017ல் 19.81% ஆகவும் (தேசிய சராசரி 18%) உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வங்கிகள் இந்தியாவிலேயே அதிக கடன் – வைப்பு வீதமான 119.15 விழுக்காட்டைக் கொண்டுள்ளது. இந்திய அளவில் இதன் வீதம் 77.5 விழுக்காடு மட்டுமே உள்ளது.

### 11.10.2 கல்வி

#### அ) பள்ளிக் கல்வி

நிகர மாணவர் சேர்க்கை வீதம் தமிழகத்தில் அதிகரித்துள்ளது. நிதி ஆயோக் அறிக்கையின்படி 2015–16ல் துவக்க நிலையளவில் நிகர மாணவர் சேர்க்கை வீதம் தமிழ்நாடு (89.24 சதவீதம்) கேரளாவை (79.94 சதவீதம்) மற்றும் தேசிய சராசரியைவிட (74.74 சதவீதம்) அதிக அளவில் உள்ளது. இது உலக அளவில் 59 சதவீதமாகவும் உள்ளது.

**அட்டவணை 11.13 தமிழ்நாடு தொடக்கக் கல்வி புள்ளிவிபரம்**

**தமிழ்நாடு தொடக்கக் கல்வி புள்ளிவிபரம் 2014–15**

| | | |
|---|---|---|
| பள்ளிகளின் எண்ணிக்கை | துவக்கப் பள்ளிகள் | 35,414 |
| | நடுநிலைப் பள்ளிகள் | 9,708 |
| | உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் | 12,911 |

(ஆதாரம்: தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் 2016–17)

தொடக்கப் பள்ளிக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 118.8% (வகுப்பு 1–5) ஆகவும், நடுநிலைப் பள்ளிகளுக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 112.3% (வகுப்பு 6–8) ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளுக்கான மொத்த மாணவர்


11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 283 20-02-2020 13:28:52

சேர்க்கை வீதம் 62.7% (வகுப்பு 9–10) ஆகவும், மேல்நிலை பள்ளிகளுக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 49.26% (வகுப்பு 11–12) ஆகவும் உள்ளது.

### ஆ) உயர்கல்வி

உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு தொடர்ந்து பிற மாநிலங்களைக் காட்டிலும் முதன்மை பெற்று முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை வீதமான (GER) 46.9% அனைத்து மாநிலங்கள் மற்றும் தேசிய சராசரியை விட அதிகமாகவுள்ளது.

**அட்டவணை 11.14 உயர்கல்வியில் மொத்த சேர்க்கை வீதம்**

| மாநிலம் | 2015–16 | 2016–17 |
|---|---|---|
| தமிழ்நாடு | 44.3 | 46.9 |
| மகாராஷ்டிரா | 29.9 | 30.2 |
| உத்திரப்பிரதேசம் | 24.5 | 24.9 |
| ஒடிசா | 19.6 | 21.0 |
| பீகார் | 14.3 | 14.4 |
| மொத்த இந்தியா | 24.5 | 25.2 |

(ஆதாரம்: அனைத்து இந்திய உயர் கல்விக்கான விபரம் – மனித வள மேம்பாட்டு மந்திரிசபையின் ஜனவரி 2018 அறிக்கை)

தமிழ்நாட்டில் 59 பல்கலைக் கழகங்களும், 40 மருத்துவக் கல்லூரிகளும், 517 பொறியியல் கல்லூரிகளும், 2260 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 447 பல் தொழில்நுட்ப கல்லூரிகளும், 20 பல் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்திலிருந்து 4 இலட்சம் பொறியியல் மற்றும் பல் தொழில்நுட்பம் பயின்ற மாணவர்கள் வெளியேறுகின்றனர், இது இந்திய அளவில் உச்சபட்ச அளவாகும்.

## 11.10.3 கல்விக் கடன்கள்

2013–14 லிருந்து 2015–16 வரை பொதுத்துறை வங்கிகள் முக்கியத் துறைகளுக்கு வழங்கும் கடன்களின் அளவுகளில் 20.8 சதவீதத்தை கல்விக் கடனாக வழங்கியுள்ளன. ஆந்திர பிரதேசம் 11.2 சதவீதத்துடன் இரண்டாம் இடத்திலும், 10.2 சதவீதத்துடன் மகாராஷ்டிரா மூன்றாமிடத்திலும் உள்ளன. 18 மாநிலங்கள் மொத்த கடன்களில் 1 சதவீத கடனையே கல்விக்கு அளித்துள்ளன. தமிழ்நாட்டில் தான் இந்திய அளவில் அதிக பயனாளிகள் உள்ளனர்.

இதே காலகட்டத்தில் தனியார் வங்கிகள் கேரளாவில் 37.8 சதவீதமும், தமிழ்நாட்டில் 24.8 சதவீதமும் வழங்கியுள்ளன. மொத்த தனியார் வங்கி வழங்கியுள்ள கல்வி கடன்களில் கர்நாடகம் மற்றும் கேரளா 60 சதவீத அளவிற்கு வழங்கியுள்ளதுன. நாடு முழுமைக்கும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தனியார் வங்கிகள் மொத்த கல்விக் கடனில் 1 சதவீத அளவே வழங்கியுள்ளன.

## 11.10.4 உடல்நலம்

தமிழ்நாடு மூன்றடுக்கு உடல்நல அடிப்படைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன. அவை மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக நல மையங்கள் ஆகியனவாகும்.



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 284 20-02-2020 13:28:52

மார்ச் 2015ல் தமிழகத்தில் 34 மாவட்ட மருத்துவமனைகளும், 229 துணை மருத்துவமனைகளும், 1254 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 7555 துணை நிலையங்களும், 313 சமூக நல மையங்களும் உள்ளன.

## 11.10.5 தொலை தொடர்பு

இந்தியாவில் இணையத்தின் பயன்பாட்டின் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அம்மாநிலத்தில் 29.47 மில்லியன் இணைய பயன்பாட்டாளர்கள் உள்ளனர். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்கள் உள்ளன. மார்ச 2016ம் ஆண்டு அரசு புள்ளி விவரப்படி இந்தியாவில் மொத்தம் 342.65 மில்லியன் இணையதள சந்தாதாரர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் 28.01 மில்லியன் சந்தாதாரர்களும் அண்டை மாநிலங்களான ஆந்திராவில் 24.87 மில்லியன், கர்நாடகாவில் 22.63 மில்லியன் சந்தாதாரர்களும் உள்ளனர்.

## 11.10.6 போக்குவரத்து

தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது. அதன் மூலம் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கிறது. நாட்டிலுள்ள நகரங்கள் கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் அங்காடிப் பகுதிகளை இணைக்ககூடியத் தரமான விரிவுபடுத்தப்பட்ட சாலைப் போக்குவரத்தைக் கொண்டுள்ளது. மாநில முதலீட்டுற்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

### அ) சாலை வசதி

மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன. தங்க நாற்கரத் திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது. சென்னையிலுள்ள கோயம்பேடு மற்றும் ஈரோடு மத்தியப் பேருந்து நிலையங்கள் நம் மாநிலத்திலுள்ள மிகப்பெரிய மற்றும் இரண்டாவது மிகப்பெரிய பேருந்து நிலையங்களாகும். தமிழநாட்டின் மொத்த சாலை நீளம் 1,67,000 கி.மீ. ஆகும். இதில் 60,628 கி.மீ. தொலைவு தேசிய நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகிறது. பொது மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் 20% திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

### ஆ. இரயில் போக்குவரத்து



தமிழ்நாடு நன்கு மேம்படுத்தப்பட்ட இருப்புப் பாதை அமைப்பைக் கொண்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தென்னக இரயில்வே தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திராவின் சில பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின்



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 285 20-02-2020 13:28:52

மொத்த நீளம் 6693 கி.மீ. ஆகும். 690 இரயில் நிலையங்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கின்றது. சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகியவை முக்கிய தொடர் வண்டி நிலையங்களாகும். சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதி விரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து தொடங்குவதற்கான பணி மே 2017 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### இ. வான்வழிப் போக்குவரத்து

தமிழ்நாட்டில் நான்கு முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. மும்பை மற்றும் தில்லிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது. கோயம்புத்தூர் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. தூத்துக்குடி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள உள்நாட்டு விமான நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. இத்துறையின் தொடர் நடவடிக்கையின் மூலம் பயணிகள் போக்குவரத்தும், சரக்கு போக்குவரத்தும் உன்னத வளர்ச்சி அடைந்து உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் 18% வளர்கிறது.

### ஈ. துறைமுகங்கள்


சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும். நாகப்பட்டினம் நடுத்தர துறைமுகமாகும். மேலும் 23 சிறு துறைமுகங்களும் உள்ளன. இவை தற்போது ஆண்டுதோறும் 73 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாளக் கூடிய திறன் கொண்டவை. (இந்திய அளவில் 24 சதவீதம்). அனைத்து சிறிய துறைமுகங்களும், தமிழ்நாடு கடல்சார் மையத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. சென்னை துறைமுகம் கன்டெயினர்களைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கைத் துறைமுகமாகும். இது 4,00,000 வாகனங்களைக் கையாளக்கூடிய அர்ப்பணிப்பு முனையமாக தற்போது மேம்படுத்தப்பட்டு அனைத்து விதமான நிலக்கரி மற்றும் கனிமப் போக்குவரத்துகளைக் கையாள்கிறது.

## 11.11 சுற்றுலா

முற்காலத்திலிருந்தே தமிழ்நாடு ஒரு சிறந்த சுற்றுலா மையமாகத் திகழ்ந்து வருகிறது. நவீன காலங்களில் நமது மாநிலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் முதன்மைப் புகலிடமாக விளங்குகிறது. தமிழ்நாடு அரசு மேற்பார்வையில் இயங்கும் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத்துறை (TTDC) தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துகிறது. இந்திய மாநிலங்களில் 25கோடி சுற்றுலாப் பயணிகளுடன் (2013) தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இத்துறையின் ஆண்டு சராசரி வளர்ச்சி 16 சதவீதமாக உள்ளது. தோராயமாக 28 இலட்சம் வெளிநாட்டுபயணிகள் மற்றும் 11 கோடி உள்நாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிகின்றனர்.




11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 286 20-02-2020 13:28:52




## 11.12 வறுமை மற்றும் வேலையின்மை

*தேசிய அளவில் வேலைவாய்ப்பின்மை அளவின் சராசரி 50 (1000ம் பேருக்கு) ஆக உள்ளது. தமிழ்நாட்டில் 1000க்கு 42 பேர் வேலையில்லாமல் உள்ளனர். தேசிய அளவில் தமிழகம் 22வது இடத்திலுள்ளது. பலவகையான வேலையின்மை பொருளாதார நிலைக்கேற்ப உள்ளது. அவற்றை முழுமையாக அறிவதன் மூலமே வேலைவாய்ப்பைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.*


*தமிழ்நாடு இந்தியாவின் வளமான மாநிலங்களில் ஒன்றாகும். 1994 லிருந்து நமது மாநிலம் வறுமையில் நிலையான*




*சரிவை சந்தித்து வருகிறது. பல மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் வறுமையின் அளவு குறைவாக உள்ளது. சேவைத்துறை வளர்ச்சியின் விளைவாக 2005 க்குப் பிறகு இந்தியாவின் மிக வேகமாக வளரும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது.*



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 287 20-02-2020 13:28:54




## 11.13 தொகுப்புரை

தமிழக பொருளாதாரம் வளமான இயற்கை வளங்களைக் கொண்ட மாநிலமாக இல்லாத போதும் வேளாண் துறை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சி ஆகியவற்றில் சிறப்பான முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது. வங்கி, கல்வி, போக்குவரத்து மற்றும் சுற்றுலா துறைகளில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு நலக் குறியீடு, கல்வி மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் முதல் மூன்று இடங்களுக்குள் உள்ளது. வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதலில் நல்ல முன்னேற்றம் கொண்டுள்ளது. இருப்பினும் இந்தியா முழுமைக்கும் தமிழ்நாடு உட்பட சில பணிகளை இன்னும் செய்யவேண்டியுள்ளது. பெண் சிசு கொலை, குடிசைப் பகுதியில் வாழும் மக்கள், சாலையோரம் படுத்திருப்போர், யாசகம் கேட்போர், சட்டத்துக்கு புறம்பான செயல்களில் ஈடுபடுவோர் போன்றவற்றின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். மேற்கண்டவற்றை சரிசெய்யாமல் முன்னேற்றம் என்பது அர்த்தமற்றதாகி விடும்.

### பிற்சேர்க்கை –1

| தமிழ்நாட்டு மக்கள் தொகை வளர்ச்சி (2011 கணக்கெடுப்பின் படி) | |
|---|---|
| • மொத்த மக்கள் தொகை | *72138958* |
| • ஆண்கள் | *36158871* |
| • பெண்கள் | *35980087* |
| • தோராய பிறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு) | *15.7* |
| • தோராய இறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு) | *7.4* |
| • வளர்ச்சி விகிதம் (ஆயிரத்துக்கு) | *8.3* |
| • அதிக மக்கள் தொகையுடைய மாவட்டங்கள் | சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவாரூர் |



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 288 20-02-2020 13:28:54

| | |
|---|---|
| • குறைவான மக்கள் தொகையுடைய மாவட்டங்கள் | பெரம்பலூர், நீலகிரி, அரியலூர், தேனி |
| • மக்கள் தொகை அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு) | 555 (2011) – 480(2001) |
| • மிக அதிக அடர்த்தி | சென்னை (26903), கன்னியாகுமரி (1106) |
| • குறைவான அடர்த்தி உள்ள மாவட்டம் | நீலகிரி (288), திருச்சிராப்பள்ளி (602) |
| • பாலின விகிதம் (1000 ஆண்களுக்கு) | 995 பெண்கள் (2011), 987 பெண்கள் (2001) |
| • அதிக பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள் | நீலகிரி (1041 பெண்கள்)<br>கன்னியாகுமரி (1031 பெண்கள்)<br>நாகப்பட்டினம் (1025 பெண்கள்) |
| • குறைவான பாலின விகிதம் உடைய மாவட்டங்கள் | தேனி (900 பெண்கள்) தர்மபுரி (946 பெண்கள்) |
| • குழந்தை பாலின விகிதம் (0–6 வயதுக்குட்பட்ட) | 946 பெண் குழந்தைகள் (2011)<br>942 பெண் குழந்தைகள் (2001) |
| • அதிக குழந்தை பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள் | நீலகிரி (985), கன்னியாகுமரி (964) |
| • குறைவான குழந்தை பாலின விகிதம் கொண்டமாவட்டங்கள் | கடலூர் (896), அரியலூர் (897) |
| • எழுத்தறிவு விகிதம் | 80.33% – (2011) 73.45% (2001) |
| • ஆண் எழுத்தறிவு விகிதம் | 86.81% – (2011) 82.33% (2001) |
| • பெண் எழுத்தறிவு விகிதம் | 73.86% – (2011) 64.55% (2001) |
| • அதிக எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டங்கள் | கன்னியாகுமரி (92.14%) சென்னை (90.33%) |
| • குறைந்த எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டங்கள் | தருமபுரி (64.71%), அரியலூர் (71.99%) |

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| **தனி நபர் வருமானம் (ஒரு தனிநபரின் வருமானம்)** | = மொத்த மாநில உள் நாட்டு உற்பத்தி / மாநில மக்கள் தொகை |
| **GSDP மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி** | மாநிலத்தில் ஓர் ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு |
| **சிசு இறப்பு வீதம்** | ஒரு வயது பூர்த்தியடையும் முன் இறக்கும் பச்சிளங் குழந்தைகளின் எண்ணிக்கை (1000 க்கு) |
| **குழந்தை இறப்பு வீதம்** | ஐந்து வயது பூர்த்தியடையும் முன் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை (1000 க்கு) |
| **கடன் வைப்பு வீதம்** | வங்கிக் கடன்களுக்கும் வைப்புகளுக்கும் உள்ள விகிதம் |



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 289 20-02-2020 13:28:54

| | |
|---|---|
| **உயிரி எரிபொருள்** | *காட்டாமணக்கு போன்ற தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்* |
| **MSMEs** | *குறு சிறு நடுத்தர நிறுவனங்கள்* |
| **குறு நிறுவனங்கள்** | *25 இலட்சத்திற்கு மிகாமல் மூலதன முதலீடு கொண்ட நிறுவனங்கள்* |
| **சிறு நிறுவனங்கள்** | *25 இலட்சத்திற்கும் அதிகமாக ஆனால் 10 கோடிக்கும் குறைவான மூலதன முதலீடு கொண்ட நிறுவனங்கள்* |

## மாதிரி வினாக்கள்

5U1ZGA

### பகுதி – அ

**சரியான (அல்லது) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கு மேலாக உள்ளது?
   - அ) கேரளா
   - ஆ) பஞ்சாப்
   - இ) குஜராத்
   - ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. பாலின விகிதத்தில் தமிழ்நாட்டின் தரம்
   - அ) முதல்
   - ஆ) இரண்டாவது
   - இ) மூன்றாவது
   - ஈ) நான்காவது

3. தமிழ்நாடு எதில் வளமானது?
   - அ) வன வளம்
   - ஆ) மனித வளம்
   - இ) கனிம வளம்
   - ஈ) மேற்கூறிய அனைத்தும்

4. நீர்பாசனத்தின் முக்கிய ஆதாரம்
   - அ) அணைக்கட்டுகள்
   - ஆ) கால்வாய்கள்
   - இ) கிணறுகள்
   - ஈ) குளங்கள்

5. பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்
   - அ) கோயம்புத்தூர்
   - ஆ) திருப்பூர்
   - இ) ஈரோடு
   - ஈ) கரூர்

6. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது?
   - அ) தமிழ்நாட்டின் நுழைவாயில் – தூத்துக்குடி
   - ஆ) வீட்டு ஜவுளி தயாரிப்பு – ஈரோடு
   - இ) எஃகு நகரம் – சேலம்
   - ஈ) பம்ப் நகரம் – கோயம்புத்தூர்

7. கீழுள்ள நகரங்களில் எதில் சர்வதேச விமான நிலையம் இல்லை?
   - அ) மதுரை
   - ஆ) திருச்சி
   - இ) தூத்துக்குடி
   - ஈ) கோயம்புத்தூர்

8. பயிர் உற்பத்தியில் எந்தப் பயிரைத் தவிர தமிழ்நாடு முன்னணியில் உள்ளது?
   - அ) வாழைப்பழம்
   - ஆ) தேங்காய்
   - இ) தோட்டப்பயிர்கள்
   - ஈ) ஏலக்காய்



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 290 20-02-2020 13:28:54

9. எந்த பயிர் உற்பத்திக்காக அதிகப் பரப்பு நிலம் பயன்படுத்தப்படுகிறது?

அ) நெல்
ஆ) கரும்பு
இ) நிலக்கடலை
ஈ) தேங்காய்

10. எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்

அ) இரண்டு
ஆ) நான்கு
இ) ஆறு
ஈ) எட்டு

11. குறு சிறு நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம்

அ) I
ஆ) II
இ) III
ஈ) IV

12. தமிழ்நாட்டின் எம்மாவட்டத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?

அ) நாகப்பட்டினம்
ஆ) நீலகிரி
இ) திருச்சி
ஈ) தஞ்சாவூர்

13. எம்மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாகவுள்ளது?

அ) மதுரை
ஆ) தேனி
இ) அரியலூர்
ஈ) கடலூர்

14. எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது?

அ) சண்டிகர்
ஆ) பாண்டிச்சேரி
இ) இலட்சத்தீவு
ஈ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்

15. தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது?

அ) வேளாண்மை
ஆ) தொழில் துறை
இ) சுரங்கம்
ஈ) பணிகள்

16. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம்

அ) 2
ஆ) 4
இ) 6
ஈ) 7

17. SPIC அமைந்துள்ள இடம்

அ) சென்னை ஆ) மதுரை
இ) தூத்துக்குடி ஈ) புதுக்கோட்டை

18. TICEL ன் பகுதி

அ) இரப்பர் பூங்கா
ஆ) ஜவுளி பூங்கா
இ) உணவு பூங்கா
ஈ) உயிரி பூங்கா,

19. சிமெண்ட உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது?

அ) மூன்றாம்
ஆ) நான்காம்
இ) முதல்
ஈ) இரண்டாம்

20. தென்னக இரயில்வேயின் தலைமையிடம்

அ) திருச்சி
ஆ) சென்னை
இ) மதுரை
ஈ) கோயம்புத்தூர்

## பகுதி – அ (விடைகள்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | இ | ஆ | இ | ஆ | ஆ | இ | ஈ | அ | ஈ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| அ | ஆ | இ | ஆ | ஈ | ஈ | இ | ஈ | அ | ஆ |



11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 291 20-02-2020 13:28:54

### பகுதி – ஆ

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.**

21. சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களைக் கூறுக. விகிதங்களையும் குறிப்பிடுக
22. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) – வரையறு
23. தமிழ்நாட்டுக்கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக் குறிப்பிடுக
24. தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை?
25. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?
26. தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?
27. குறு நிறுவனங்கள் – வரையறு

### பகுதி – இ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடையளி.**

28. தமிழ்நாட்டின் கனிம வளங்கள் – குறிப்பு வரைக
29. தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை (GSDP)விளக்குக
30. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி
31. தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் ஏதேனும் இரண்டு உணவுப் பயிர்களின் உற்பத்தித் திறன்களை ஒப்பிடுக
32. சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை விவரி
34. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?
35. சுகாதாரத்துறையில் தமிழ்நாட்டின் செயல்திறனை விளக்குக

### பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.**

37. மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி
38. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி
39. தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.

### செயல்பாடு:

1. அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று பயிர் உற்பத்தி மற்றும் அதற்கான பாசன வசதி மற்றும் அங்குள்ள விவசாயிகளின் வாழ்க்கை நிலையை ஆராய்க.

### பார்வை நூல்கள்


1. A. G. Leonard - **Tamil Nadu Economy** – 2006, Laxmi Publications
2. V. Rajalakshmi - **Tamil Nadu Economy** – 1 Jun 2002, BPI (India) PVT Ltd

**https://www.ibef.org/states/tamil-nadu.aspx**

**https://www.quora.com/Can-Tamil-Nadu-become-the-biggest-economy-in-India**

**https://www.indiatoday.in › India**

**statisticstimes.com/economy/economy-of-tamil-nadu.php**





11_Tamil Economic Chap 11_28.09.2018.indd 292 20-02-2020 13:28:54